**நிவிதிகல பிரதேச சபை - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நிவிதிகல பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயற்பாட்டு தொடற்பான கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிவிதிகல பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு தரநியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்:

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றது எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்படுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகளானவை சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலையான வைப்பு வட்டி ரூபா 71,342 குறைவாக கணக்கிடப்பட்டிருந்தது. | 2023 ஆம் வருடத்திலே சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | சரியாக கணக்கிடப்பட வேண்டும். |
| (ஆ) | டொலொஸ்வல கொம்போஸ்ட் மையத்தின் ரூபா 467,580ஆன மின்சார விநியோக கிரயம் மூலதனமாக்கப்பட்டிருக்க வில்லை. | 2023 ஆம் வருடத்திலே சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | -மேற்படி- |
| (இ) | நிலையான சொத்துக்களின் நன்கொடைகள் ரூபா 1,036,938 நிதி செயற்பாட்டுக் கூற்றில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் வருடத்திலே சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | -மேற்படி- |
| (ஈ) | மீளாய்வாண்டில், கடை வாடகை பட்டியலிடப்படல் ரூபா 1,008,000 குறைவாகக் கணக்கிடப்பட்டிருந்தது. | 2023 ஆம் வருடத்திலே சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | -மேற்படி- |
| (உ) | மீளாய்வாண்டின் இறுதியில், மோட்டார் வாகனம் மற்றும் கைவண்டிக் கணக்கின் இருப்பு ரூபா 18,448,710 குறைவாக கணக்கிடப்பட்டிருந்தது. | 2023 ஆம் வருடத்திலே சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | 2021 ஆம் வருடத்திலே நீதிமன்றத் தீர்ப்பின் காரணமாக 25 ஆண்டுகளாக இடைநீக்கம் செய்யப்பட்ட ஒரு ஊழியருக்கு வெலுத்தப்பட வேண்டிய நிலுவையில் உள்ள ஊதியம் மற்றும் கொடுப்பனவுகள் கணக்கிடப்படவில்லை. | 2023 ஆம் வருடத்திலே சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | -மேற்படி- |

### 1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| விடயம் | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| -------- | ------------------------- | ----------- |
| கூட்டு மொத்தம் ரூபா 56,737,900 வான 02 கணக்கீட்டு விடயங்களின் விரிவான உப பதிவேடுகள் சமர்ப்பிக்கப்படிருக்கவில்லை. | எதிர்காலத்தில் உப பதிவேடுகள் சமர்ப்பிக்கப்படுவதாக. | போதுமான மற்றும் பொருத்தமான ஆதாரங்களை முன்வைக்கப்பட வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ---------------------------- | ---------------------------- | ------------ |
| 2015 முதல் 2019 வருடங்கள் வரையிலான காலக்கட்டத்திற்குரிய கூட்டு மொத்தம் ரூபா 321,938 வான காலாவதியான பல்வேறு வைப்புக்கள் நிதிப்பிரமாணம் 571 (2) இன் பிரகாரம் சீர் செய்யப்பட்டிருக்கவில்லை. | கருத்துகள் தெரிவிக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 5,713,191 தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 9,227,262 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன

சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவள்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான மூலம் | 2022 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | 2021 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 2,574,429 | 2,698,119 | 2,645,318 | 1,285,333 | 2,625,910 | 2,635,747 | 2,682,083 | 1,404,190 |
| வாடகை | 13,053,700 | 7,688,250 | 7,517,814 | 147,990 | 12,469,600 | 5,826,000 | 4,860,668 | 826,700 |
| உத்தரவுப் பத்திரக் கட்டணம் | 1,163,590 | 1,026,705 | 1,026,705 | 1,500 | 1,252,540 | 1,096,267 | 1,096,267 | 1,500 |
| ஏனைய வருமானம் | 2,507,250 | 3,164,210 | 3,163,442 | - | 2,314,300 | 3,278,566 | - | - |
| | 19,298,969 | 14,577,284 | 14,353,279 | 1,434,823 | 18,662,350 | 12,836,580 | 8,639,018 | 2,232,390 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில், ரூபா 1,092,853 ஆன நிலுவை வீத வரி மீதியினுள் 05 ஆண்டுகளுக்கு மேலாக பழைய ரூபா 469,203 மீதி காணப்பட்டிருந்தது. | தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியை கருத்தில் கொண்டு, முதல் காலாண்டில் சொத்துக்கு தடை விதிக்கப்படவில்லை என்றாலும், இறுதிக் காலாண்டில் ரூபா 112,102 வருமானமொன்று சொத்து தடை செய்தல் மூலம் அறவிடப்பட்டுள்ளதாக. | நிலுவை வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில், ரூபா 115,815 ஆன நிலுவை ஏக்கர் வரி மீதியினுள் 03 ஆண்டுகளுக்கு மேலாக பழைய ரூபா 70,495 மீதி காணப்பட்டது. | துரிதமாக ஏக்கர் வரி தொடர்பாக ஆய்வொண்டு மேற்கொள்ளப்பட்டு ஏக்கர் வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | நிலுவை வருமானங்களை அறவிடப்பட வேண்டும். |
| (இ) | சுற்றுச்சூழல் அனுமதியைப் பெற வேண்டிய நிறுவனங்களை அடையாளம் காண மீளாய்வாண்டில் கணக்கெடுப்பொன்று மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | 2023 ஆம் ஆண்டில் சுற்றுச்சூழல் அனுமதி வழங்கப்பட வேண்டிய வியாபார நிலையங்களை அடையாளம் காண்பதற்காக கணக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளதாக. | வருடாந்த கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு நிலுவை வருமானங்கள் அறவிடப்படல் வேண்டும். |
| (ஈ) | கட்டணம் செலுத்தப்படாத தொலைபேசி ஒலிபரப்புக் கோபுரங்கள் அடையாளம் காணப்பட்டு வியாபார வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | 2023 ஆம் ஆண்டில், தொலைபேசி கோபுரங்களை கொண்டுள்ள நிறுவனங்கள் உறுதியாக அடையாளம் காணப்பட்டு கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | சபைக்கு கிடைக்கப் பெற வேண்டிய வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் விதிக்கப்பட்டுள்ள விடயங்களை நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்கள் முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகளும் நலன்புரியும் ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றது.

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கொம்போஸ்ட் மையமொன்றிற்காக 2019 ஆம் ஆண்டு முதல் ரூபா 9,329,705 செலவிடப்பட்டுள்ளது. மேலும், 2022 ஆகஸ்ட் 08ஆம் திகதி மாகாண சபையிலிருந்து ரூபா 950,000 பெறுமதியான பெலர் இயந்திரமொன்றும் கிடைக்கப் பெற்றிருந்தது. எனினும், மின்சாரம் இல்லாததன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியிலும் அந்த செயற்திட்டத்தின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை. | மும்முனை மின்சாரத்தை பெற்றுக்கொள்வதற்கு தேவையான பணிகள் இடம்பெற்றுக் கொண்டிருப்பதுடன், தற்போது உரம் அரித்தல் மேற்கொள்ளப்படுவதுடன், 1500 கிலோ கிராம் அளவிலான உரம் அரிக்கப்பட்டு பொதி செய்யப்பட்டுள்ளதாகவும், அந்த பணிகள் தினமும் நடைபெற்று வருவதாக. | திண்மக் கழிவு முகாமைத்துவ வேலைத் திட்டமொன்று வடிவமைத்து செயல்படுத்தப்பட வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் தலைமை அலுவலக வளாகம் மற்றும் உப அலுவலக வளாகம் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் வருடத்திலே சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக | மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கிடப்பட வேண்டும். |
| (ஆ) | விநியோகிக்கப்பட்ட 96 கொடி கம்பங்களும் மீண்டும் கையளிக்கப்பட்டிருக்க வில்லை. அதில், 15 கம்பங்களின் பெறுமதி அறவிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 1,032,750 ஆன 81 கம்பங்களின் பெறுமதிகள் பொதுச் சபை தீர்மானத்தின் படி பொறுப்புவாய்ந்த வர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. அத்தோடு 35 பொருட்களின் பற்றாக்குறைக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்கள் நிச்சயிக்கப்பட்டிருக்க வில்லை. | 51 கொடி கம்பங்களை கொண்டு வருவதற்கு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 30 கம்பங்கள் கொண்டு வருவதற்கு அல்லது அதற்கான நட்டயீட்டை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் பொருள் பற்றாக்குறைக்கு பொறுப்புவாய்ந்த வர்களின் 2023 ஏப்ரல் மாத சம்பளத்தில் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள தாக. | இது தொடர்பாக பொறுப்புவாய்ந்த தரப்பினரை அடையாளம் கண்டு அறவிடப்பட வேண்டும். |

## 3.4 வாகனங்களின் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமில்லாத 04 வாகனங்களின் உரிமைகள் உரித்தாக்குவதற்கு அல்லது மீண்டும் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | தலைமைச் செயலாளரின் அறிவுறுத்தலின்படி பொறுப்பேற்க உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக. | 02/2017 இன் சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கலி வாழ்வாதார கொடுப்பனவொன்றாக மீளாய்வாண்டில் சபைக்கு கிடைக்கப் பெறப்பட்ட ரூபா 88,600 முறையான அங்கீகாரமின்றி பல நபர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவாக வழங்கப்பட்டிருந்தது. | பிரதேச சபைகள் சட்டத்தின் 9.3 பிரிவின் பிரகாரம், செயலாளரினால் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு அந்த கொடுப்பனவு 2017 ஆம் ஆண்டிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டதாக. | ஊக்குவிப்புக் கொடுப்பனவு செலுத்துவதற்கு ஆளுநரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |